அப்பொழுது அந்த நிறுவனத்தினர் என்ன காரணத்தைக் காட்டி, அரசிடம் வரி விலக்கு கேட்டார்கள். என்ன காரணங்களை ஏற்றுக்கொண்டு அரசு அவர்களுக்கு வரி விலக்கு கொடுத்தது. அவர்கள் தயாரித்த பொருள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே பி. வி. சி. என்றபைப் தயாரிக்கிற நிறுவனம் இது மட்டும்தான் இப்பொழுதுகூட. அப்பொழுதும் இதுமட்டும்தான் இருந்தது. நான் முதலிலேயே சொன்னேன், ஒரு தொழிற்சாலை வந்தால் மக்களுக்குப் பயன்படுகிற பொருள்களை உற்பத்தி செய்தால். அவர்களுக்கு வரி விலக்கு அந்த அரசு கொடுத்திருக்கிறது என்றால், அதன் மீது நடவடிக்கை எடுக்க முடியாது என்று நான் சொல்லி இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. தகவல் கோரல்

அ. செய்திச் சுருக்கம்-குழுக்கள் நியமனம்

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, குழுக்கள் நியமனத்தைப்பற்றி நாம் காலத்தை நீட்டித்து தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறோம். ஆனால் அது அனுப்பப்பட்டுள்ள ஜிஸ்ட் ஆப் புரொசிடிங்கில் சேர்க்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றைய முன் தினம் நடந்த கூட்டத்திலே அரசின் ஒரு தீர்மானத்தின் மூலமாக குழுக்கள் எல்லாம் ஓர் ஆண்டு காலத்திற்கு நீட்டிக்கப்பட்டிருக்கின்றன என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதுபற்றி திரு. ஹேமச்சந்திரன் அவர்களுக்கு அச்சடித்து அனுப்பப்பட்டிருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆ. ஸ்டான்லி மருத்துவமனையில் காணப்பெறும் குறைபாடு.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, கடந்த 5,6. நாட்களாக சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் நோயாளிகளுக்கு ரொட்டி, பழம், பால் போன்றவைகள் எதுவும் சப்ளை செய்யப்படவில்லை. நேற்றையதினம் நான் ஸ்டான்லி மருத்துவமனைக்குச் சென்றிருந்தபோது . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் ஸ்டான்லி மருத்துவமனைக்குச் சென்றதற்கு நன்றி. இது குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சர் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரிடம் புகார் கொடுங்கள்.